பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஸ்ரீ தை மீ 04 உ வியாழக்கிழமை (17-01-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 51

# மாணவர் நேற்று எழுச்சிப் பேரணி!

## கல்வி அடக்குமுறைகளை கண்டிக்க ஆயிரக்கணக்கில் திரண்டனர்

யாழ்ப்பாணம், ஜனவரி 17

கல்வி அடக்குமுறைகளைக் கண்டித்து ஆயிரக்கணக்கான மாணவர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் சைக்கிளில் பெரும் எழுச்சிப் பேரணி ஒன்றை நடத்தினர்.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் இந்தப் பேரணி சுன்னாகத்தில இருந்து ஆரம்பமானது.

தமிழ் மாணவர்கள் மீது ஸ்ரீலங்கா அரசு புரிந்துவரும் கல்வி அடக்குமுறையைக்கண்டித்தும், தென் தமிழீழ மாணவர்களின் கல்வி உரிமைக்குக் குரல் கொடுக்கும் வகையிலுமே இந்தப் பேரணி நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகள், மற்றும் தனியார் கல்வி நிலையங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் பேரணியில் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.

பேரணி சுன்னாகத்திலிருந்து கே. கே. எஸ் வீதி வழியாக கோண்டாவிலை வந்தடைந்தது. அங்குள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மாதிரிச் செயலகத்தில் மாணவர்கள் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

தொடர்ந்து பேரணி அங்கிருந்து புறப்பட்டு நல்லூரில் உள்ள அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஸ்தானிகராலயத்தை வந்தடைந்தது. அங்

[2ஆம் பக்கம் பார்க்க]

## கட்டுவனில் கடும் மோதல்

யாழ்ப்பாணம், ஜன. 17

கட்டுவன் இராணுவத்தினர் நேற்றுக்காலை 9.30 மணியளவில் முகாமை விட்டு வெளியேறி, முன்னேற முயன்றபோது கடும் மோதல் மூண்டது.

விடுதலைப் புலிகள் பதிலுக்கு அருள்-89 தாக்குதலை நடத்தினர்.

அதை அடுத்து படையினர் பின்வாங்கி முகாம் சென்றடைந்தனர்.

இதேவேளை—

கட்டுவன் மினி முகாம் இராணுவத்தினர் நேற்றும் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

கட்டுவனில் சில பகுதிகளிலும் தெல்லிப்பளையிலும் ஷெல்கள் விழுந்து வெடித்தன. இதனால் வீடுகள் சேதமுற்றன என்று தெரிவிக்கப்பட்டது.

இப்பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேறி விட்டதால், உயிர், உடற் சேதங்கள் தவிர்க்கப்பட்டன. (ஒ-15)

## முச்சந்தி முரளி



அணு ஆயுதத்தை வைச்சிருக்கிற தைரியத்திலைதான் உவர் சதாம் உந்தப் பிடி பிடிக்கிறயர் போலை......!

## சிலாவத்தை பகுதியில் சண்டை மூண்டது

யாழ்ப்பாணம், ஜன.17

முல்லைத்தீவு மாவட்டம் சிலாவத்தையில் நேற்று முன்தினம் காலை 8.15 மணியளவில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் சண்டை இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சண்டையில் படையினருக்கு பலத்த சேதம் ஏற்பட்டதாகவும்—

விடுதலைப் புலிகள் தரப்பில் இரண்டு போராளிகள் வீரமரணமடைந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

சந்துரு[மா.யோகரட்ணம்-விஸ்வமடு]. டக்ளஸ்[ச.சந்திரன்-பாரதிபுரம். இரணைமடுச் சந்தி] ஆகிய இருவருமே வீரமரணமடைந்தவர்களாவர். (க)

## ரவை வெடித்துச் சிதறி சிறுவன் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ்.கோட்டையைப் பார்வையிட வந்த சிறுவர்கள் சிலர் அங்கு வெறுமனே சிந்திக் கிடந்த ரவைக் கோதுகளை எடுத்துச்சென்று விளையாடினர். அந்த ரவைக் கோதொன்றைக் கல்லினால் அடித்தபோது அது ரவை திடீரென வெடித்துச் சிதறியதில் சிறுவன் ஒருவன் படுகாயமுற்றான்.

நேற்று முன்தினம் நடந்த இச்சம்பவத்தில் காயமடைந்த தச்சன்தோப்பைச் சேர்ந்த பரமசாமி நிஸாகரன் (13 வயது) யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். [ஒ-6]

## காலக்கெடு காலாவதியானது!

வாஷிங்டன், ஜனவரி 17

வளைகுடா நெருக்கடிக்கு சமரசத் தீர்வு ஒன்றைக் காண கடந்த ஆறு மாதங்களாக எடுக்கப்பட்டு வந்த சகல இராஜதந்திர முயற்சிகளும் தோல்வி கண்ட நிலையில், குவைத்தில் இருந்து ஈராக் படைகள் வெளியேற ஐ. நா. பாதுகாப்புச் சபை விதித்திருந்த காலக்கெடு, இலங்கை நேரப்படி நேற்றுக் காலை 10.30 மணியளவில் முடிந்தது.

கடைசி நிமிடத்தில் பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் ஆகியன எடுத்த சமரச முயற்சிகளும் தோல்வி கண்டன.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி குவைத்தை ஈராக் ஆக்கிரமித்தது தெரிந்ததே! (உ-எ)

## ஈராக்கிடம் அணு ஆயுதம்?

வாஷிங்டன், ஜன. 17

ஈராக்கிடம் அணு ஆயுதங்கள் உள்ளன என்ற சந்தேகத்தை 'வாஷிங்டன் டைம்ஸ்' பத்திரிகை நேற்று எழுப்பியது.

அந்தத் தைரியத்தில் தான் ஈராக் இப்படி அசாதாரண துணிச்சலுடன் நடந்து கொள்வதாகவும் அப்பத்திரிகை கூறியது.

ஆனால் கதிர் வீச்சு மூலம் உயிர்களைப் பலியாக்கும் கொடுமையான ஆயுதங்கள் ஈராக்கிடம் இருக்கக் கூடும் என அமெரிக்கா சந்தேகிப்பதாக செய்திகள் கூறுகின்றன.

ஈராக்கிடம் அணுகுண்டு இல்லை என்றே இதுவரை நம்பப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. [உ-எ]

## முதலில் விமானத் தாக்குதல்

வாஷிங்டன் ஜன. 17

போர் ஆரம்பமானதும் முதலில் அமெரிக்கா தலைமையிலான பன்னாட்டுப் படைகள் ஈராக் மீது விமானத் தாக்குதலையே நடத்தும் என்று பென்டகன் வட்டாரங்களை ஆதாரங்காட்டி பி. பி. சி. அறிவித்தது.

விமானத் தளங்கள், ராடர் நிலையங்கள் ஆகியனவே விமானத் தாக்குதலுக்கு இலக்காகக்கூடும் என்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## இஸ்ரவேல் இல்லாமல் போகும்!

பக்தாத், ஜன. 17

அமெரிக்கா, ஈராக்மீது போர் தொடுக்குமானால் இஸ்ரவேல் என்ற பெயரில் ஒரு நாடு இந்த உலகில் இருக்காது.

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் இவ்வாறு நேற்று எச்சரித்தார்.

இரசாயன ஆயுதங்களைக் கொண்டு இஸ்ரவேல் மீது தாக்குதல் நடத்துவோம். ஈராக்கிடம் உள்ள ஏவுகணைகள் இஸ்ரவேலைச் சென்று தாக்கும் வல்லமை படைத்தவை—என்றார் அவர்

இதற்கிடையில் ஜனாதிபதி சதாம் ஹுசேன் ஈராக் ஆயுதப்படைகளின் தலைமைத் தளபதியாக நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார். [உ-எ]

## பதிலடி பயங்கரமாம்!

டெல் அவிவ், ஜன 17

இஸ்ரவேல் மீது ஈராக் தாக்குதல் நடத்தும் வாய்ப்பு அதிகமாக உள்ளது என்று பிரதமர் யிற்ஷாக் ஷாமிர் சொன்னார்.

அப்படி இடம்பெற்றால் இஸ்ரவேலின் பதிலடி பயங்கரமாக இருக்கும் என்றும் திரு. ஷாமிர் சொன்னார். இஸ்ரவேல் மீது தாக்குதல் நடத்தும் எதிரி விமானங்கள், ஜோர்தான், சிரியா மீது பறந்து சென்றாலும் இஸ்ரவேல் விமானங்கள் அவற்றைக் கலைத்துச் சென்று தாக்கி அழிக்கும் என்று இஸ்ரவேல் விமானப்படைத் தளபதி நேற்று எச்சரித்தார். (உ-எ)

## பிரிட்டன் பிரதமரின் தாராளம்!

லண்டன், ஜன. 17

ஈராக்குக்கு எதிரான போரில் பிரிட்டன் அணு ஆயுதங்களைப் பயன்படுத்தாது என்று பிரதமர் ஜோன் மேஜர் நேற்று அறிவித்தார்.

ஈராக் அணு ஆயுதங்களைப் பயன்படுத்தினால் பிரிட்டனும் அணுஆயுதங்களைப் பயன்படுத்தும் உரிமையைப் பெறுகிறது என்றும் பிரதமர் மேஜர் சொன்னார்.

அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவது இல்லை என்று ஐ. நா. உடன்பாட்டில் ஈராக்கும் கையெழுத்திட்டிருப்பதாகவும் அவர் சொன்னார். (உ-எ)

## அரபுப் பிரதேசத்தில் ஊரடங்கு

டெல்அவிவ், ஜனவரி 17

ஐ. நா. காலக்கெடு முடிவடைந்ததைத் தொடர்ந்து பாலஸ்தீனத்திடமிருந்து கைப்பற்றப்பட்ட காஸா அரபுப் பிரதேசம் முழுவதையும் ஊரடங்குச் சட்டத்தின் கீழ் இஸ்ரவேல் அரசு கொண்டு வந்தது.

இதேவேளை, ஜோர்தான், சிரியா ஆகிய நாடுகளுக்கும் இஸ்ரவேல் அரசு கடுமையான எச்சரிக்கை ஒன்றை நேற்று விடுத்தது.

இஸ்ரவேலின் எல்லைப்புற நாடுகளான சிரியாவும் ஜோர்தானும் தங்கள் துருப்புகளை தயார் நிலையில் வைத்திருப்பதைத் தொடர்ந்தே இஸ்ரவேலின் அறிக்கை வெளியானது. இஸ்ரவேல் தாக்கப்பட்டால் சரியான பதிலடி கொடுக்கப்படும் என்று அந்த எச்சரிக்கை கூறியது. (உ-எ)

## குண்டு வீச்சு

யாழ்ப்பாணம், ஜன. 17

நேற்றுக் காலை 10 மணியளவில் இயக்கச்சிக்கு அருகே உள்ள சங்கத்தார் வயலில் இரண்டு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

இந்தத் தாக்குதலில் 14 வயதுச் சிறுமி ஒருத்தி காயமடைந்தாள்.

சேத விவரங்கள் குறித்து மேலதிக தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை. [உ]

## நகரில் ஹெலி வீசிய பிரசுரம்

யாழ்ப்பாணம், ஜன. 17

நேற்று யாழ். நகரப் பகுதியை வட்டமிட்ட ஹெலி ஒன்று சிவப்பு எழுத்துக்களில் தட்டச்சுச் செய்யப்பட்ட பிரசுரம் ஒன்றை வீசியது.

திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில், உரும்பராய்ப் பகுதிகளிலும் இதே பிரசுரங்கள் வீசப்பட்டன.

சில பகுதிகளில் ஏரிக்கரை பத்திரிகைகளும் போடப்பட்டன. (ஒ-6-51)

## ஐவர் கைது

மட்டக்களப்பு மாவட்டத்தில் செட்டிப்பாளையம் முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் தாளங்குடாப் பகுதியில் கடந்த வெள்ளியன்று 5 தமிழர்களைக் கைதுசெய்தனர்.

அவர்களில் வயோதிபர் ஒருவர் மட்டும் கடுமையாகத் தாக்கப்பட்டபின்னர் விடுவிக்கப்பட்டார். ஏனையோருக்கு என்ன நடந்தது என்பது தெரியவரவில்லை. (உ)

## மின்கோபுர திருத்த வேலைக்கு கொழும்பு அதிகாரியும் மாங்குளம் வந்துள்ளார்

மாங்குளம், ஜன. 17

சேதமடைந்த மாங்குளம் மின்கோபுர திருத்த வேலைகளைக் கவனிக்க கொழும்பில் இருந்தும் மின் அத்தியட்சகர் ஒருவர் தலைமையகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

தமிழ் அதிகாரியான இவர் யாழ்ப்பாணத்தில் இருந்து திருத்த வேலைகளை மேற்கொள்ள வந்த குழுவினருடன் இணைந்து செயற்படுவார் என்று தெரிவிக்கப்பட்டது.

அனேகமாக முதற்கட்ட திருத்த வேலைகளை நேற்று ஆரம்பிக்கக்கூடிய சாத்தியம் இருந்ததாக விஷயமறிந்த வட்டாரங்கள் இங்கு தெரிவித்தன. (ஒ)

### பிந்திய செய்தி

## அமெரிக்கவிமானங்கள் வளைகுடா நோக்கி...?

லண்டன், ஜன. 17

இந்து சமுத்திர தளமான டியகோகார்சியாவிலிருந்து மத்திய கிழக்கில் பெயர் குறிக்கப்படாத ஓர் இடத்தை நோக்கி அமெரிக்காவின் எப். 52 ரக - நவீன குண்டு வீச்சு விமானங்கள் விரைந்து கொண்டிருப்பதாக நேற்று நள்ளிரவு செய்திகள் தெரிவித்தன.

எத்தனை விமானங்கள், எந்த இடத்தை நோக்கி விரைந்தன என்பது பற்றிய விவரங்கள் வெளியிடப்படவில்லை.

இதற்கிடையில் —

சவூதி அரேபியாவின் எல்லைப் புறங்களில் உள்ள ஈராக்கிய விமானத் தளங்களில் இயங்கும் ''ராடர்'' கருவிகளை குழப்பக் கூடியதான சமிக்ஞைகளை தொடர்ந்து விடுக்குமாறு அமெரிக்கா தனது படைகளுக்கு உத்தரவிட்டிருப்பதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜய்காந்த் மகனின் பெயர் 'பிரபாகரன்'

மதுரை, ஜன. 17

தமிழ் இனத்துக்குப் பெருமை சேர்க்கும் பிரபாகரனின் பெயரை தனது மகனுக்குச் சூட்டப்போவதாக நடிகர் விஜய்காந்த் தெரிவித்தார்.

"இப்போது நான் 'சப்டன் பிரபாகரன்' படத்தில் நடித்து வருகிறேன். இந்த நேரத்தில் ஆண் குழந்தை எனக்குப் பிறந்திருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது".

"எனது குழந்தைக்கு தமிழினத்துக்குப் பெருமை சேர்க்கும் பிரபாகரனின் பெயரை சூட்ட ஆசைப்படுகிறேன். இது பற்றி குடும்பத்தில் பெரியார்களிடம் என் விருப்பத்தைத் தெரிவித்து இருக்கிறேன்".

— இப்படி விஜய்காந்த் சொன்னார். (உ-எ)

## மக்களை பயமுறுத்தும் பிரங்கிப்படகு

புங்குடுதீவு, ஜன. 17

புங்குடுதீவு கடற்பகுதியில் கடந்த சில தினங்களாக நங்கூரமிட்டிருக்கும் பிரங்கிப் படகு இடையிடையே வேட்டுக்களைத் தீர்த்து மக்களைப் பயமுறுத்திக்கொண்டிருக்கிறது.

பொங்கல் தினத்தன்று மீன் பிடித்துக்கொண்டிருந்த படகு ஒன்றின் மீதும் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. படகு சிறுசேதமடைந்தது. [ஒ-136]

## கால்கோள் விழா இன்று

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் நூற்றாண்டு நினைவுக் கட்டடத்துக்கான கால்கோள் விழா இன்று காலை 10 35 மணிக்கும் 11 47 க்கும் இடையில் உள்ள சுபவேளையில் நடைபெற உள்ளது.

அத்திவாரத்துக்கான மங்கலப் பொருள்கள் வண்ணை சிவன் கோவிலில் இருந்து விசேட பூசையின் பின்னர் காலை 8 30 மணிக்கு ஊர்வலமாக கல்லூரிக்கு எடுத்துச் செல்லப்படும். [அ]

## மீண்டும் பகல் நேர படகுச் சேவை

புங்குடுதீவு ஜன 17

கடந்த சில தினங்களாக நிறுத்தப்பட்டிருந்த அராலியூடான பகல் நேர படகுச் சேவை மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

பிற்பகல் 1 30 மணி தொடக்கம் படகுச் சேவை நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-131)

# மீன் முள் சிக்குண்டு பச்சிளம் பாலகன் பலி!

யாழ்ப்பாணம், ஜன. 17

சோறு சாப்பிட்ட போது தவறுதலாக மீன் முள் ஒன்றை விழுங்கிய ஒரு வயதுக் குழந்தை ஆபத்தான நிலையில் யாழ் போதனா ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு, ஒரு மணி நேரத்தின் பின்னர் அங்கு மரணமானது.

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:—

குழந்தைக்கு தாய் உணவூட்டியபோது மீன் முள்ளும் தவறுதலாக சோறுடன் சேர்ந்து போய் விட்டது.

அந்த அதிர்ச்சி காரணமாக குழந்தைக்கு மூச்சடைப்பு ஏற்பட்டது. இதயத் துடிப்பும் பலவீனமானது.

உடனடியாக குழந்தை யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டது. வைத்தியர்கள் ஒருமணிநேரம் போராடினர். என்னும் குழந்தை இறந்து விட்டது.

நேற்று நடந்த இந்தச் சம்பவத்தில் குருநகரைச் சேர்ந்த ஆர். சிவனேசன் என்னும் பாலகனே பரிதாபமாக உயிரிழந்தான். [ஓ 6]

# பெரிய கடை தபால்கள் தபாலகத்தில் தேக்கம்

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ்ப்பாணம் பெரிய கடைப் பகுதியைச் சேர்ந்த விநியோகம் செய்யப்படாத சாதாரண கடிதங்கள் பல யாழ் பிரதம தபாலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன. கடந்த ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் பெறப்பட்ட கடிதங்களும் இவற்றுள் அடங்கும்.

ராணுவ நடவடிக்கை காரணமாக அநேக வியாபார ஸ்தாபனங்கள் சேதமாக்கப் பட்டும், சில தொடர்ந்து மூடப்பட்டும் இருப்பதால் தபால் ஊழியர்களினால் இவற்றை விநியோகம் செய்ய முடியாமல் உள்ளது என்றும் உரியவர்கள் யாழ். பிரதம தபாலகத்துக்கு நேரில் வந்து கடிதங்களை பெற்றுக் கொள்ளலாம் என்றும் யாழ். பிரதம தபாலதிபர் திரு மா. திலகநாதன் தெரிவித்துள்ளார். [இ]

## சோவியத் வெளியுறவு அமைச்சர்

மாஸ்கோ, ஜன. 17

சோவியத் யூனியனின் புதிய வெளியுறவு அமைச்சராக திரு. அலெக்ஸாண்டர் பெத்மேயவ் என்பவரை ஜனாதிபதி கோர்பச்சேவ் நேற்று நியமித்தார்.

70 வயதான இவர் தற்சமயம் அமெரிக்காவில் சோவியத் தூதராகப் பணியாற்றி வருகின்றார். அதற்கு முன்னர் திரு. கோர்பச்சேவின் கீழ் முதலாவது துணைப் பிரதமராகவும் பணியாற்றியிருந்தார்.

இதேவேளை—

திரு. கோர்பச்சேவ் புதிய அமைச்சரவை ஒன்றை அறிவித்திருக்கிறார். பிரதம மந்திரியாக புதிய ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். (ர-எ)

## திறப்புவிழா

கொழும்புத்துறை ஜன. 17

நாயன்மார்கட்டு சனசமூக நிலையத்தின் புதிய கட்டடத் திறப்புவிழா இன்று மாலை நடைபெற உள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் திரு. ந. இரகுநாதன் தலைமையில் நடைபெற இருக்கும் விழாவில், புதிய கட்டடத்தை திரு ப. கணபதிப்பிள்ளை திறந்துவைப்பார். (ஊ 30)



# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 07 - 01 - 1908

உதிர்வு: 17 - 12 - 1990

திதி: 17 - 01 - 1991

## திருமதி கனகம்மா சிதம்பரநாதர்

அன்புத் தெய்வமே! எங்களையெல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்டதேன் அம்மா உங்கள் நினைவலைகளால் ஏங்கித் தவிக்கும் நிலையில் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

டச் றோட்,
சண்டிலிப்பாய். [சி-5652]

# ஆனையிறவு பகுதியில் தாக்குதல் சம்பவங்கள்

தென்மராட்சி, ஜன. 17

ஆனையிறவு இராணுவத்தினர் நேற்றும் ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

இயக்கச்சி, உமையாள்புரம் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன.

கடந்த சில தினங்களாக — தவறாமல் — ஷெல் வீச்சுக்கள் நடக்கின்றன.

ஆனையிறவுப் பகுதியில் நேற்று முன்தினம் காலை 8 மணி முதல் 8 30 மணி வரை சீ பிளேனில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. காலை 10 மணியளவில் அதே இடத்தில் இரண்டு பொம்மர்கள் குண்டு வீசித் தாக்குதலையும் நடத்தின.

இதேசமயம்— (ஓ-117)

## பாப்பரசர் வேண்டுகோள்

வத்திக்கான் நகரம், ஜன 17

ஐ நா. காலக்கெடு முடிவடையும் வேளையில் பரிசுத்த பாப்பரசர் கடைசி நிமிட வேண்டுகோள் ஒன்றை அமெரிக்க, ஈராக் ஜனாதிபதிகளுக்கு அனுப்பிவைத்தார்.

ஜனாதிபதி புஷ்ஷுக்கு அனுப்பியுள்ள வேண்டுகோளில், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதாக யுத்தம் ஒருபோதும் அமையாது என்று பாப்பரசர் தெரிவித்துள்ளார். யுத்தத்தைத் தவிர்த்து சமாதான வழிகள் மூலம் நெருக்கடிக்குத் தீர்வு காணும்படியும் புஷ்ஷை அவர் கேட்டுக்கொண்டார்.

ஜனாதிபதி சதாம் ஹுசேனுக்கு அனுப்பிய வேண்டுகோளில் "மக்களை அழிவிலிருந்து காப்பாற்ற உங்களுக்குத் தாராள மனப்பான்மையை வழங்கும்படி இறைவனை வேண்டுகின்றேன்"- என்று பாப்பரசர் கூறியிருந்தார். (உ-எ)

## யாழ். தபாலகங்களில் தர்மப்பணம்

யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட தபால் அலுவலகங்களில் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களுக்குரிய மாதாந்த உதவிப் பணம் (தர்மப்பணம்) வழங்கப்பட்டு வருகிறது.

இப்பணத்தை பெற்றுக் கொள்ளாதவர்கள் தத்தமது பகுதியில் உள்ள தபாலகந்தோறில் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் நேரில் சென்று பெற்றுக்கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ 30)

## மருத்துவபீட பரீட்சை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கான பரீட்சைகள் திட்டமிட்டபடி இன்று ஆரம்பமாகும்.

யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் அ துரைராஜா இதனைத் தெரிவித்தார்.

மேற்படி பரீட்சைகளை இதே தினங்களில் கொழும்பில் நடத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் சொன்னார். [ஓ-6]

# முதலாம் ஆண்டு நினைவு



தோற்றம்: 17 — 08 — 1919

மறைவு: 17 — 01 — 1990

மிருசுவில்

## திருமதி மேரிறோசம்மா நிக்கலஸ்

(பாக்கியம்)

[இளைப்பாறிய ஆசிரியை]

ஆண்டொன்று கழிந்ததம்மா
ஆண்டவர் பதம் நீர் அடைந்து
ஆயிரம் ஆண்டுகள் கடந்தாலும்
ஆறாது எங்கள் மனம்

அன்னாரின் ஆன்மசாந்திக்காக மிருசுவில் புனித நிக்கிலாஸ் ஆலயத்தில் காலை ஆறு மணிக்கும், யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் 18 - 1 - 91 காலை ஆறேகால் மணிக்கும், யாழ் அருள் ஆச்சிரமத்தில் 17 - 1 - 91 மாலை 5½ மணிக்கும் இரங்கற்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும். பலியில் பங்குபற்றி அன்னாரின் ஆன்ம சாந்திக்காக வேண்டுமாறு, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

பிரிவால் வருந்தும்:
மக்கள், மருமக்கள், சகோதரி,
சகோதரன், பேரப்பிள்ளைகள்.

19, தவசிகுளம், மிருசுவில். நன்றி! [15738] 141/1, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# ஆசிரிய மாணவர் தெரிவு நேர்முகப் பரீட்சைகள்

## இன்று முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 17

ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளுக்கு ஆசிரிய மாணவர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் இன்று ஆரம்பமாகின்றன.

பலாலி ஆசிரிய கலாசாலைக்கு ஆசிரிய மாணவர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் இன்று 17 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை திருநெல்வேலியில் உள்ள பலாலி ஆசிரிய கலாசாலையில் நடைபெறும்.

தொடர்ந்து கோப்பாய் ஆசிரிய கலாசாலைக்கு ஆசிரிய மாணவரை தெரிவு செய்யும் நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெறும்.

புதிதாக தெரிவு செய்யப்படும் ஆசிரிய மாணவர்களுக்கான கலாசாலை அனுமதிகள் பெப்ரவரி 5 ஆம் திகதி வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ 6)

## மாணவர் நேற்று...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கும் மாணவர்கள் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

பின்னர் அங்கிருந்து கோவில் வீதி வழியாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் அலுவலகத்தை அடைந்து அங்கும் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து முத்திரைச்சந்தியில் வைத்து, வட பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் பேரணியை வரவேற்று, மாணவர்களிடமிருந்து மகஜரைப் பெற்றுக்கொண்டார்.

பின்னர் பேரணி கச்சேரி- நல்லூர் ... செயலகத்தை அடைந்து அங்கு வைத்து மேலதிக அரசாங்க அதிபர் க. சண்முகநாதனிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

இலங்கை அரசின் இனப்படுகொலையையும், கல்வி அடக்குமுறையையும் கண்டிக்கும் வாசகங்களைக் கொண்ட சுலோகங்களும் பேரணியில் எடுத்துச் செல்லப்பட்டன. கோஷங்களும் எழுப்பப்பட்டன.

வானத்தில் ஹெலி வட்டமிட்ட போதும், பெரும் மழைக்கு மத்தியிலும் இந்தப் பேரணி இடையூறின்றித் தொடர்ந்து நடைபெற்றது. [உ-ஓ-5]

# மரண அறிவித்தல்கள்

## சகோதரி சித்ரா சேவியர்

மானிப்பாயைச் சேர்ந்த, இலங்கை பெந்தெகொஸ்தே சபை தேவ ஊழியராகிய சகோதரி சித்ரா 16-01-1991 புதன்கிழமை மகிமைக்குட் பிரவேசித்தார்.

சுண்டுக்குளியில் நடைபெறவிருக்கும் அன்னாரது அடக்க ஆராதனை ஒழுங்குகள் பின்பு அறிவிக்கப் படும்.

தகவல்:
பாஸ்டர் தேவநாயகம்
இலங்கை பெந்தெகொஸ்தே சபை
1/1, கண்டி வீதி, சுண்டிகுளி. (15546)

## திரு. துரையப்பா இரத்தினகோபால்

(யாழ் / கில்னர் ஒழுங்கை மாரியம்மன் கோயில் காவலரும், ஓய்வுபெற்ற இலங்கைப் போக்குவரத்துச் சபை காப்பாளரும் - நடத்துநரும்)

வண்ணார்பண்ணையைச் சேர்ந்த துரையப்பா இரத்தினகோபால் (கோயில் அண்ணை) 16-01-1991 இல் சிவபதமடைந்தார்.

அன்னார் வேலம்மாவின் அன்புக்கணவரும், செல்வி சிவபுரத்தரசி (ஆசிரியை, யா / கொட்டடி நமசிவாய வித்தியாலயம்) யின் அருமைத் தந்தையாரும், திருமதி இராமாமிர்தம் சண்முகசுந்தரம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் 17-01-1991 (இன்று) பிற்பகல் 1-00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

185/9, கப்டன் பாரதி வீதி,
(கில்னர் ஒழுங்கை)
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
நி. குஞ்சிதபாதம்
(பெறாமகன்)
[15231]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### யாழ் இந்துவின் நூற்றாண்டு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி நூற்றாண்டு நினைவுக் கட்டடத்திற்கான கால்கோள் விழா இன்று நடைபெறுகிறது. யாழ்ப்பாணம் நகர உயர்நிலைப் பள்ளியாக இருந்து, இந்து உயர் நிலைப் பள்ளியாக உருவெடுத்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கடந்த [1990] வருடத்துடன் தனது நூற்றாண்டுப் பணியைப் பூர்த்தி செய்திருந்தது.

இலங்கையிலேயே முதன் முதலாக நிறுவப்பட்ட இந்து உயர்நிலைப் பள்ளி என்ற சிறப்புக்குரியது இந்தக் கல்லூரி. வடமாகாணத்திலேயே [ஆண்களுக்கான] ஒரேயொரு தேசியக் கல்லூரி என்ற பெருமையும் அதற்கு உண்டு. அதனை மாட்டு, கல்லூரிக் கீதத்தில் கவிஞர் வியந்தது போல, தமிழர் தலைநிமிர் கழகமாகவும், தனிப்பெரும் கல்விக் கலையகமாகவும், அது மிளிர்கிறது.

வெளிநாட்டு ஆட்சி ஆதிக்கம் இந்நாட்டில் தலைவிரித்தாடிய போது, சைவத்துக்கும், தமிழுக்கும் பேராபத்துடன், சோதனைகளும் ஏற்பட்டன. எங்கள் முன்னோரில் மொழிப்பற்றும், மதப்பற்றும் உள்ள பலரின் முயற்சியால் அந்த முட்டுக்கட்டைகள் முறியடிக்கப்பட்டன.

மொழி, மதம், கலாசாரம் ஆகியவற்றை எதிர்நோக்கிய இடர்களைக் களைந்தெறிய முன்னின்று உழைத்து வெற்றி கண்ட தலைமுறையின் வரலாற்று நாயகனாக விளங்கியவர் நாவலர் பெருமான். அவர் ஆரம்பித்துப் பின்னர் கைவிடப்பட்ட பாடசாலையே பின்னர் இந்து உயர்நிலைப் பள்ளியாக, இன்று இந்துக் கல்லூரி என்ற பெருவிருட்சமாக ஓங்கி வளர்ந்திருக்கிறது.

சைவ பரிபாலன சபை என்ற தொட்டிலில் வளர்ந்த யாழ். இந்து, வடக்கின் தலைசிறந்த இந்துக் கல்விக் கூடமாகும். அங்கு பல தலைமுறைகளாகப் பயின்றவர்கள் நாட்டின் பதினாறு திக்குகளிலும், உலகின் பல நாடுகளிலும் கல்லூரியின் புகழ் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்து சமயத்தைச் சேர்ந்த பிள்ளைகள், சமயச் சூழலில் பயின்று, கல்வி கேள்விகளில் சிறந்து, வாழ்க்கையில் உயர்நிலை எய்த வேண்டும் என்ற சபையின் இலட்சியம் யாழ். இந்துக் கல்லூரி மூலம் நிறைவேறியது; நிறைவேறி வருகிறது.

தொடர்ச்சியான, சீரான, சிறப்பான, தரமான, மரபு செறிந்த, கலாசாரச் சூழல் பொலிந்த நூற்றாண்டுக் கல்விப் பணி என்பது அரும் பெரும் சாதனை.

அந்த வகையில் ஈழத் தமிழர் கல்வி வரலாற்றில் யாழ். இந்துவுக்குத் தனி இடம், சிறப்பிடம் உண்டு. அதனை நிறுவியவர்கள், தாலாட்டியவர்கள், சீராட்டியவர்கள், பேணி வளர்த்தவர்கள், தொடர்ந்து பாதுகாத்து வருபவர்கள் ஆகிய சகல தலைமுறையினருக்கும் அந்தப் பெருமையில் பங்குண்டு. அவர்களின் உழைப்பும், திறமையும், தியாகமும் இன்று நினைவிற் கொள்ளப்படவேண்டியவை.

அதே வழி தொடர்ந்து, கால மாற்றங்களை எதிர்கொண்டு, ஈடுகொடுத்து, தொடர்ந்தும் தமிழ் மக்களுக்கு கல்வி அறிவூட்டி, அறிவொளி ஏற்றி யாழ். இந்து மேன்மேலும் வளர்வதாக. அதன் பொருட்டு மாணவர், ஆசிரியர் மக்கள் ஆகிய முத்தரப்பார் முயற்சியும், ஆற்றலும், அர்ப்பணிப்பும் இணைவதாக.

# ஊன்றுகோல் தட்டுப்பாட்டினால் ஊனமுற்ற நோயாளர்கள் அவதி

## தேவை இல்லாதோர் திருப்பி ஒப்படைக்க வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜன. 17

இராணுவ அசம்பாவிதங்கள், மற்றும் விபத்துக்கள், நோய்கள் காரணமாக கால் ஊனமுற்று சிகிச்சை பெற்று வரும் பல நோயாளிகளுக்கு யாழ். போதனா வைத்தியசாலை ஊன்றுகோல் வழங்க முடியாத நிலையில் இருந்து வருகிறது.

ஊன்றுகோல்கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் மரத்துக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இதன் காரணமாக வைத்தியசாலையின் முறிவு நெரிவு மின் ஒட்டுத்தொழிற்சாலையின் ஊன்றுகோல் தயாரிக்கும் பகுதி ஸ்தம்பிதமடைந்த நிலையில் உள்ளது.

மேலும் இங்கிருந்த சுமார் 400க்கும் மேற்பட்ட அலுமினிய ஊன்றுகோல்கள் ஏற்கனவே நோயாளர்களுக்கு வழங்கப்பட்டு முடிவடைந்து விட்டன.

சிறு பிள்ளைகளுக்கான அலுமினிய ஊன்றுகோல்களே தொழிற்சாலையில் இன்னும் இருக்கின்றன.

நோயாளி சுகமடைந்து பாவனைக்கு தேவை இல்லாதபோது வைத்தியசாலையில் திருப்பி ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையிலேயே அலுமினிய ஊன்றுகோல்கள் வழங்கப்படுகின்றன.

ஆனால் பலர் இவற்றை திருப்பி ஒப்படைப்பதில்லை என்று கூறப்படுகிறது.

தமமிடமுள்ள தேவை இல்லாத ஊன்றுகோல்களைத் திருப்பி வைத்தியசாலையில் ஒப்படைக்கும்படி வைத்தியசாலை நிர்வாகப் பணிப்பாளர் திரு. பத்மநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-15)

## போலியோ மருந்து இல்லை

யாழ்ப்பாணம், ஜன 17

யாழ். மாவட்டத்தில் குழந்தைகளுக்கு வழங்கும் போலியோ, முக்கூட்டு ஆகிய மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது.

இது சம்பந்தமாக பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளபோதிலும் இம் மருந்து வகைகள் கொழும்பிலிருந்து அனுப்பப்படவில்லை.

இதனால் உரிய வேளையில் குழந்தைகளுக்கு தடுப்பு மருந்து வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. [இ-18]

## யாழ். ஆஸ்பத்திரி வர ஒருவருக்கு 6ஆயிரம் தேவை!

குடாநாட்டுக்கும் - தீவுப் பகுதிக்கும் இடையில் போக்குவரத்துக் கஷ்டம் இருப்பதால் நெடுந்தீவில் இருந்து ஒரு நோயாளியை அவசர சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவர இங்குள்ள ஒருவருக்கு சுமார் 6ஆயிரம் ரூபா செலவாகிறதாம்.

நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்கு நோயாளரை எடுத்துவரும் படகுக் கட்டணம் குறிகாட்டுவானில் இருந்து அராலித்துறைக்கான மோட்டார் வாகனக் கட்டணம், அதன்பின் அராலித்துறைக்கான மோட்டார் வாகனக் கட்டணம், அதன்பின் அராலித்துறையில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கான வாகனக் கட்டணம் ஆகியவை இதில் அடங்கும்.

வசதி குறைந்தவர்களால், நெடுந்தீவில் இருந்து அவசர நோயாளரை யாழ். வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதென்பது நினைத்துப் பார்க்கக் கூட முடியாது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-111)

## சல்வீனியா அழிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ். ஆரியகுளத்திலிருந்து சல்வீனியா செடிகளை அகற்றும் கடினமான வேலையை மாநகரசபை ஊழியர்கள் நேற்று செய்து முடித்தனர்.

இதன் அடுத்த கட்டமாக சல்வீனியா தாவரத்தின் வளர்ச்சியைத் தடுக்கக்கூடிய களைக்கொல்லி ஒன்றைத் தெளிக்க இருப்பதாக மாநகர சபை வேலைப்பகுதிப் பொறியியலாளர் திரு. வி. தவராஜா கூறினார். (இ-6)

## நியாய விலை விற்பனை நிலையம்

தென்மராட்சி ஜன 17

சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நியாய விலை விற்பனை நிலையம் சாவகச்சேரி சந்தையில் சங்கத் தலைவர் க. அருந்தவபாலனால் திறந்து வைக்கப்பட்டது. (இ - 117 - 31)

## முத்திரை இல்லை

யாழ் குடாநாட்டுக்கு "குமண" கப்பலில் வந்து சேர்ந்த தபால் பொதிகளில் முத்திரைகள், பதிவுத் தபால் கவர் எதுவும் இருக்கவில்லை.

இது தொடர்பாக தபால் மா அதிபருடன் தொடர்பு கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக மாவட்ட தபால் அத்தியட்சகர் திரு. என் சடாட்சரநாதன் தெரிவித்தார். (இ-6)

# 30ஆயிரத்து 856 பேர் ஓய்வுபெற விண்ணப்பம்

கொழும்பு ஜன. 17

சுயவிருப்புத் திட்டத்தின் கீழ் 30 ஆயிரத்து 856 அரச ஊழியர்கள் ஓய்வு பெற விண்ணப்பித்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை வரை விண்ணப்பித்தோரின் எண்ணிக்கையே இது என்று பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது. (இ - எ)

# பட்டப்பின் கல்வி டிப்ளோமா பரீட்சையில் சித்தி பெற்றோர்

யாழ். பல்கலைக்கழக பட்டப்படிப்பின் கல்வி டிப்ளோமா 1989 பகுதிநேரப் பரீட்சையில் சித்தி அடைந்தோர் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இவர்களில் 3 பேர் விசேட சித்தியும், 52 பேர் சாதாரண சித்தியும், ஒருவர் மீண்டும் நூன சித்தியும் அடைந்துள்ளனர்.

சித்தியடைந்தோர் விவரம் வருமாறு:-

**விசேட சித்தி**

திருமதி பி. ஜெயராசா, திரு. கே. சிதம்பரநாதன், திருமதி ரி. விசுவநாதன்.

**சித்தி**

எம். பாலசுப்பிரமணியம், செல்வி பி. துரைசாமி, திருமதி எச். பிரான்சிஸ், எம். ஏ. கி. எம். ஷவார்ட், எம். ஞானலிங்கம், திருமதி ஜே. ஜவ்பார், பி. கமலநாதன், செல்வி எஸ். கந்தையா, செல்வி வி. கந்தையா, ரி. காங்கேசபிள்ளை.

என். கிருஷ்ணராஜா, எஸ். குபேரநாதன், திருமதி ஆர். மகாதேவா, வி. மாணிக்கம், வி. எஸ். மாதவகுமாரன், திருமதி வி. நடராஜா, திருமதி சி. நல்லநாதன், செல்வி எம். நாராயணி, ரி. எல். ஓங்காரமூர்த்தி, வி. பத்மநாதன்.

கே. பேமின்பநாயகம், எம். எஸ். பீற்றர்சிங்கம், செல்வி எஸ். பொன்னையா, ஆர். ரகுபதி, செல்வி எம். ராமநாதன, திருமதி எல். என். ஜோசப், திருமதி பி. ரட்ணவேலு, செல்வி எம். பி. சவரிமுத்து. செல்வி எஸ். செல்வத்துரை, திருமதி எம். சண்முகலிங்கம்.

வி. எஸ். சிவசுப்ரமணியம், கே. சிதம்பரநாதன், திருமதி பி. சிவஞானம், என். சிவகடாட்சம், திருமதி பி. சிவபாலன், திருமதி ஆர். சோமசுந்தரம், செல்வி வை. சோமசுந்தரம், செல்வி வை. சோமசுந்தரம் திருமதி ஆர். சோதிலிங்கம், ஏ. ஸ்ரீக்குமரன்.

ஏ. ஸ்ரீகாந்தமூர்த்தி, ரி. சுப்பிரமணியம், ஆர். தயாபாலன், எம். ஏ. தவரட்ணராஜா, எஸ். தேவராஜா, திருமதி ஜே. திருலிங்கம், எஸ். திலகநாதன், கே. வேலாயுதம், திருமதி வி. விஜயகுமார், திருமதி ஆர். குட்டித்தம்பி, வி. ஸ்ரீஸ்கந்தராஜா.

[illegible] திருமதி ம. ஸ்ரீ[illegible] [இ-6]

### கப்பலில் வந்து

# திரும்பிப்போன உலர் உணவு லொறிகளில் வருகிறது

ஒட்டிசுட்டான், ஜன 17

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு, கப்பல்களில் வந்து கடல் கொந்தளிப்புக் காரணமாக திருப்பி விடப்பட்ட உலர் உணவுப் பொருள்கள் லொறிகளில் மீண்டும் கொண்டு வரப்படுகின்றன.

அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலம் கொழும்பு சென்று அரச உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியதைத் தொடர்ந்தே 32 லொறிகளில் உலர் உணவுப் பொருள்கள் வருகின்றன. (இ-113)

# அமைய ஊழியர்களில் எண்மர் வேலை நீக்கம்

நவாலி, ஜன. 17

யாழ். செயலகத்தில் லிகிதர்களாக பணிபுரியும் 8 பேரை பதவி நீக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாண சபை அறிவித்துள்ளது.

இந்த மாகாண சபையால் நியமனம் பெற்ற 16 ஊழியர்கள் யாழ். செயலகத்திலும் உதவி அரசாங்க அதிபரின் அலுவலகங்களிலும் அமைய ஊழியர்களாக பணிபுரிகின்றனர். இவர்களில் 8 பேருக்கு அடிப்படைத் தராதரம் இல்லை என்றும் இவர்களை வேலை நீக்கம் செய்யுமாறும் வடக்கு - கிழக்கு மாகாண சபையின் உள்துறை அமைச்சு யாழ். அரச அதிபரைப் பணித்துள்ளது.

இந்த எட்டுப் பேரும் தற்போது யாழ். பிறப்பு, இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் பணிபுரிகின்றனர். (இ-100)

# ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி வேலணைக்கு இடம் மாறும்

ஊர்காவற்றுறை இராணுவ நடவடிக்கையால் இயங்க முடியாத நிலையில் இருந்த ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலை வேலணை மத்திய கல்லூரி மாணவர் விடுதிக்கு இடமாற்றம் செய்யப்பட உள்ளது.

இந்த வைத்தியசாலை ஊர்காவற்றுறையில் இருந்து ஏற்கனவே புளியங்கூடலுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தது. புளியங்கூடலில் போதிய இடவசதி, பாதுகாப்பு இன்மை காரணங்களாலேயே இது வேலணைக்கு இடமாற்றப்படுகிறது. (இ-125)

### பலர் ஓய்வு பெற்றதால்

# சுகாதாரப் பரிசோதகருக்கு பற்றாக்குறை நிலவுகிறது

யாழ்ப்பாணம், ஜன 17

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் கடமையாற்ற 56 சுகாதாரப் பரிசோதகர்கள் தேவை. ஆனால் 11 சுகாதாரப் பரிசோதகர்கள் மட்டுமே கடமையாற்றுகிறார்கள். சுயவிருப்பத்தின் பேரில் அநேகர் ஓய்வு பெற்றுள்ளனர்.

இதனால் யாழ். பகுதியில் பொதுச் சுகாதார வேலைகள் பாதிப்படைந்துள்ளன.

இது சம்பந்தமாக யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை சுகாதாரத் திணைக்களத்துடன் தொடர்புகொண்டார்.

இதன் பலனாக புதிதாக மூவரும் மீள நியமனம் வழங்குவதன் மூலம் 16 பேருமாக 19 சுகாதாரப் பரிசோதகர்கள் கூடிய விரைவில் பதவி ஏற்கவுள்ளனர். (இ-18)

# தமிழர்களின் உண்மை நிலையை எழுத்தாளர்கள் பதிக்க வேண்டும்

## நூல் வெளியீட்டு விழாவில் உரை

சுழிபுரம், ஜன. 17

ஈழத் தமிழர்களின் உண்மை நிலையை எழுத்தாளர்கள் தமது ஆக்கங்களில் எடுத்துக் காட்ட வேண்டும். இன்றைய நிலை நாளைக்குச் சரித்திரமாகிறது. அதனை வரலாறாகப் பதிப்பது எழுத்தாளர்களின் கடமை.

இவ்வாறு தெரிவித்தார் திரு. செங்கை ஆழியான்

எழுத்தாளர் து. வைத்திலிங்கத்தின் 'ஒரு திட்டம் முடக்கப்படுகிறது' என்ற நூலின் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு வெளியீட்டுரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரஸ்தாப வெளியீட்டு விழா சுழிபுரம் பிரதேசசபை மண்டபத்தில் திரு. நா. க. தங்கரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

திரு. செங்கை ஆழியான் தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:-

பொன்னம்பலம் இராமநாதன் போன்ற தமிழ்த் தலைவர்கள் விட்ட தவறுகள் இனிமேல் நடைபெறக் கூடாது. எதிர்காலச் சந்ததியினர் நலனைக் கருத்தில் கொண்டும் இன்றைய தலைமுறையினர் திட்டங்கள் தீட்டிச் செயற்படுத்த வேண்டும்.

எழுத்தாளர் வைத்திலிங்கம் ஒரு திட்டம் செயற்படாததால் உண்மையை வெளிப்படுத்த ஓர் நாவலை உருவாக்கி உள்ளார். அதன் மூலம் அவர் ஒரு நல்ல சமூகப் பணியைச் செய்துள்ளார். சமூகத்தில் மலிந்துள்ள தவறுகள் சுட்டிக் காட்டப்பட வேண்டும். அவை யாவும் திருத்தப்பட வேண்டும் - என்றார்.

**உற்பத்தியில் கவனம் தேவை**

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வலிகாமம் மேற்குப் பகுதிப் பொறுப்பாளர் திரு. குகதாசன் மாஸ்டர் பேசுகையில் கூறியதாவது:-

எங்களது மக்களின் சிந்தனையில் நல்ல கருத்துக்கள் வேர் ஊன்றப்பட வேண்டும். இன்று எம் மத்தியில் வாழும் சிலருக்கு பல விடயங்களைப் புரிய வைக்க வேண்டி உள்ளது.

முன்னர் இருந்த சேமிப்புத் தான் எங்களை வாழ வைத்தது. இந்த நிலைமை நீடிக்க முடியாது. உணவு உற்பத்தித் தடையைக் கண்டு பயப்படக் கூடாது. எமது மூதாதையர்கள் வாழ்ந்த, வாழ்ந்து காட்டிய வழியை மறந்துவிடக் கூடாது.

உற்பத்தியில் கவனம் செலுத்த வேண்டும். பலன் தரும விதைகளை விதைத்து நல்ல பயன் காண வேண்டும். இன்று வெளியிடப்பட்ட நூலைப் போல் ஒரு திட்டம் செயற்படுகின்றது. என்ற ஓர் நூல் எழுதி விரைவாக வெளியிட எழுத்தாளர் முன் வர வேண்டும் என்றார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. எம். சின்னத்தம்பி, சட்டத்தரணி திரு. கே. குணரத்தினம், ஓய்வு பெற்ற வட்டாரக் கல்வி அதிகாரி திரு. மு. சிவானந்தன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். [அ-28]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

நெடுங்குளம் வீதியில் 7 பரப்பு காணி வருமானத்துடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 202/1, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் [15539]

**கணக்கியல்**

நடந்து முடிந்த 90 A/L கணக்கியல் வினாப்பத்திரம் Super Shine Institute இல் விற்பனைக்குண்டு. முகவரி: 76/2, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (15531

**வசி வோச் வேக்ஸ்**

264, கனகரட்ணம் வீதி, நாயன்மார்கட்டு என்னும் விலாசத்தில் இயங்கிவரும் எமது ஸ்தாபனம் வெகுவிரைவில் பழைய விலாசத்தில் ஆரம்பமாக இருக்கிறது. எம்மிடம் திருத்தக் கொடுத்த மணிக்கூடுகளை வாடிக்கையாளர்கள் மேற்படி விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம். எமமிடம் சகல விதமான மணிக்கூட்டு பற்றறிகளும் பெற்றுக்கொள்ளலாம்.

(15506)

**தேவை**

தமிழ் தட்டச்சு இயந்திரம் ஒன்று உடன் தேவை. தொடர்பு: செயலாளர் வடமாகாண ஓய்வூதியகாரர் சங்கம், 15, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி.

[15542]

**தவறிவிட்டது**

செ. திருச்செல்வத்தின் 16097168 - 1V இலக்க அடையாள அட்டை இணுவிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் க. இராசேந்திரன், 'அன்னை இல்லம்', மானிப்பாய் வீதி, இணுவிலில் ஒப்படைத்து உதவவும்.

[15540]

# சட்டவிரோத இறைச்சிக்கடை நடவடிக்கை

தென்மராட்சி, ஜன. 17

யாழ் மாவட்டத்தில் சட்டவிரோத இறைச்சிக் கடைகள் சந்தைகள் யாவும் இம் மாதம் முதலாம் திகதி தொடக்கம் தடை செய்யப்பட்டுள்ளன என்று யாழ் பிரதேச உதவி உள்ளூராட்சி ஆணையாளர் சு. டிவகலாலா சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அறிவித்துள்ளார்.

சட்ட விரோத இறைச்சிக் கடைகளை நடத்துவோரை அப்புறப்படுத்த உள்ளூராட்சி மன்றங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. (இ-117)

# RADIO - T.V & VIDEO DECK

புதிய பயிற்சி நெறி ஆரம்பமாகிவிட்டது.

16 - 1 - 1991

★ இலகு விளக்கம்
★ சிறந்த ஆசிரியர்
★ செய்முறையுடன் கூடிய துரிதபயிற்சி நெறி

விபரங்களுக்கு:-

**North Ceylon Technical Institute**
14 St. Peter's Lane,
Hospital Road,
JAFFNA.

(சி/5651)

# COMPUTER CLASSES

**DIPLOMA IN DATA PROCESSING AND COMPUTER PROGRAMING COURSE BASIC LANGUAGE**

ஆரம்பம்: 18th Jan. 1991 வாரநாள் வகுப்புக்கள்
19th Jan. 1991 வார இறுதிநாள் - வகுப்புக்கள்

[செய்முறைப் பயிற்சியும் வழங்கப்படும்]

TIME:- a. m. 9.00

விபரங்களுக்கு:

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, St. Peter's Lane, Jaffna

[சி-5650]

# ★ மங்களகரமான திறப்பு விழா ★

நிகழும் மங்களகரமான பிரமோதூத ஹூ தை மாதம் 4-ஆம் நாள் [17 - 01 - 1991] வியாழக்கிழமை பகல் 9.00 மணி முதல் 11.45 மணி வரை வரும் சுப வேளையில்

யாழ்ப்பாணம், 187 கஸ்தூரியார் வீதியில் அமைந்த கட்டடத்தில்

## ❋ வீனஸ் தங்க மாளிகை ❋

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து நடாத்த நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து விழாவை சிறப்பிக்கும் வண்ணம்

★ அன்புடன் அழைக்கின்றோம். ★



யாழ். நகரில் முன்பு இயங்கி வந்த எமது ஸ்தாபனம் நாட்டு நிலைமை காரணமாக நீர்வேலியில் இதுவரை இயங்கி தற்போது மீண்டும் யாழ். நகரில் ஆரம்பிக்கப் படுகிறது.

★ 22 கரட் தங்க நகைகள் குறித்த காலத்தில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.

தங்கள் நல்வரவை நாடும்:

இ. சடாச்சரமும்,
மகன் ச. புவிச்சந்திரனும்,
சகோதரர்களும்.

187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[15520]

# ஓராண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 10 — 03 — 1923 | 28 — 01 — 1990 |

## ● ஆ. ஜயன் ●

(நயினாதீவு)

என்றும் எங்கள் இதயத்தில் வீற்றிருக்கும் அன்புத் தெய்வமே! அன்பின் சுடர் ஒளியால் குடும்பத்தின் ஒளி விளக்காய் எம்மை மகிழ்வோடு அரவணைத்து வளர்த்து இடையில் எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு திருவடி சேர்ந்த எங்கள் தந்தையே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்;
மக்கள், மருமக்கள், பேரப் பிள்ளைகள்.

ஆ. வெற்றிக்குமார்
44/4, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்

(15525)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்:
25 - 10 - 1922

மறைவு:
19 - 12 - 1990

## வே. சு. திருச்செல்வம் அவர்கள் சாயி பதம் எய்திய நினைவு நாள்

பொறியியலாளராக இருந்து ஓய்வு பெற்ற நாள் முதல் சாயிநாமம் பாடுவதிலும், சாயிநாமத்தைக் கனிந்த இசையுடன் பாடப்பலரைப் பயிற்றுவிப்பதிலும் வாழ்நாளின் பெரும் பகுதியைச் செலவிட்டார். 20 ஆண்டுக்கு முன்பே சாயியுடன் பேசும் பாக்கியம் பெற்ற புதல்வியின் தந்தை என்ற பேறும் பெற்றார். 19 - 12 - 1990 அன்று வழமைபோல சுப்ரபாதம் பாடும் வேளை சாயி தரிசனத்துடன் அவரது ஆத்மா சாயிபதம் அடைந்தது அன்னார் சாயி ஆனார். அவர் திருவருட்பேறு பெற்ற 31ம் நாளில் அவரை நினைவு கூருகிறோம். அவரது பூதவுடலுக்கு இறை நாமம் பாடி அஞ்சலி செலுத்திய சாயி அன்பர் கூட்டத்திற்கும், உறவினர்களுக்கும் சாயி அருள் என்றும் கிடைக்க இறைஞ்சுகிறோம்.

அன்பு மனைவி,
பிள்ளைகள்,
மருமகள், பேத்தி

கொக்குவில்.

(15530)

# விண்ணுலக வாழ்வின் ஓர் ஆண்டு பூர்த்தி



| உதயம்: | அஸ்தமனம்: |
|---|---|
| 31 — 03 — 1921 | 27 — 01 — 1990 |

## அமரர் கந்தையா செல்லத்துரை

(ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர்)

திதி: 17 — 01 — 1991

ஆண்டு ஒன்று ஆகிடினும் அருமை அப்பாவே உங்கள் மறைவினை ஓர் நிஜம் என இன்னமும் நம்ப மறுக்கும் எமது இதயங்களில் என்றென்றும் நிலைத்திருந்து நல் வழி காட்ட வேண்டுகின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவன் திருவருளை வேண்டி நிற்கும்:

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரர்.

பழைய வீதி
[illegible]

[15512]

# 31 ஆம் நாள் நினைவுதினம்
## ஆத்ம சாந்திக் கிரியை



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 12 — 9 — 1914 | 18 — 12 — 1990 |

## அமரர் S. T. சுப்பிரமணியம் அவர்கள்

[பிரபல அனசுலிங்கம் சுருட்டு உற்பத்தியாளர்]

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

நீதி, நேர்மை, கடமை, கட்டுப்பாடு இவைகளின் அணிகலனாய் வாழ்ந்து வந்த அமரரின் ஆத்மசாந்திக் கிரியை எதிர்வரும் 17-1-1991 வியாழக்கிழமை அன்னாரது சுதுமலை இல்லத்தில் நடைபெறும். அன்னாரது ஆத்மா சாந்திபெற இறைவனை இறைஞ்சுகின்றோம்.

குடும்பத்தினர்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(15320)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி 202/1 இல் உள்ள அச்சகத்தில் 17 - 1 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org